செ.வெ.எண். 50 நாள்: 18.08.2017

## திருநெல்வேலி பேட்டை நரிக்குறவர் காலனியில் நரிக்குறவர் மக்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்

திருநெல்வேலி பேட்டை நரிக்குறவர் காலனியில் ஸ்காட் நிர்மான் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நரிக்குறவர் மக்களுக்கான சிறப்பு குறை தீர்க்கும் முகாம் இன்று (18.08.2017) நடைபெற்றது.

இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து நரிக்குறவர் மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். துறை அலுவலர்கள் மாலை வரை மனுக்களைப் பெற்று உடன் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். இச்சிறப்பு குறை தீர்க்கும் முகாமில், நரிக்குறவ மக்களிடம் கோரிக்கைகள் பெற்று பட்டா, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, திருமண உதவி, மகப்பேறு உதவி வழங்குவது குறித்தும், நரிக்குறவ மக்களுக்கான நல வாரியம் மூலம் அடையாள அட்டை வழங்குதல், கல்வி உதவித்தொகை வழங்குதல், இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமத்திற்கான விண்ணப்பம் பெறுதல், முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அடையாள அட்டை வழங்குதல், ஆதார் அட்டைக்கான புகைப்படம் எடுத்தல், மாற்றுத்திறனாளி அடையாள அட்டை வழங்குதல் மற்றும் உதவித்தொகை உபகரணங்கள் விண்ணப்பம் பெறுதல், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டு பொறுப்புக் குழுக்கான விண்ணப்பம் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களே நேரடியாக பெறும் வகையில் குறை தீர்க்கும் முகாம் நடைபெற்றது. இம்முகாம் நடைபெறும் அனைத்து பகுதிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று பார்வையிட்டார். மேலும், நரிக்குறவ மக்களுக்கான இலவச பொது மருத்துவ முகாம் மற்றும் இலவச கண் பரிசோதனை முகாமும் நடைபெற்றது. நரிக்குறவர் மக்களிடம் தன் சுத்தம் குறித்தும், டெங்கு விழிப்புணர்வு குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார். நிலவேம்பு குடிநீரையும் வழங்கினார். மேலும், நரிக்குறவ மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத், இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்திய நாராயணா, மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திருமதி. ஹெட்சி லீமா , மாநகர நல அலுவலர் டாக்டர்.பொற்செல்வன், வட்டார போக்குவரத்து அலுவலர் திருமதி.சசி, குழந்தை தொழிலாளர் திட்ட இயக்குநர் திரு.சந்திரகுமார், ஸ்காட் நிர்மான் பொது மேலாளர் திரு.சேவியர், திட்ட மேலாளர் திரு.சார்லஸ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி